உயிர் காத்த
வீரன்!
ரூ. 1·50

ராணி காமிக்ஸ்—60
(மாதம் இருமுறை இதழ்)

டிசம்பர் 15—31
1986

உயிர் காத்த வீரன்!

வெள்ளைக்காரர்கள், அமெரிக்காவில் குடியேறிய காலம். அப்போது இடகோ என்ற இடத்தில் பிளினி என்ற கோட்டை இருந்தது. அங்கு இருந்த படைகளுக்கு கர்னல் கிட் என்பவர் தலைவராக இருந்தார். அவர் ஒரு கெடுபிடிக்காரர். வீரர்களை, கட்டுப்பாடு என்ற பெயரில் பிழிந்து எடுப்பவர்.

உ.வீ-1

அதனால் அவர் மீது வீரர்கள் கோபமாக இருந்தனர். ஒரு நாள் வீரர்கள் நீண்ட நேரம் கவாத்து பழகி விட்டு கோட்டைக்கு திரும்பினர். அவர்களை ஓய்வு எடுக்க அனுப்பாமல் கர்னல் மீண்டும் வேலை வாங்கினார்.

கர்னல் இப்படி கடுமையாக நடந்து கொண்டதால் வீரர்கள் அதிருப்தி அடைந்ததை ஒற்றர்படைத் தலைவர் கார்சன் அறிந்தார்.

சிப்பாய்களை கலகம் செய்யும் நிலைக்கு தள்ளுகிறார்!
டான்! அப்படி சொல்லாதே! கலகம் செய்வது சரி அல்ல!
அமெரிக்க பூர்வ குடிமக்களான செவ்விந்தியர், பிளினி கோட்டையைத் தாக்க இருந்ததை கார்சன் அறிவார்.
டான்! லாங் லான்சி தலைமையில் செவ்விந்தியர்கள் போர் தொடுக்க இருக்கும் இந்த நேரத்தில் கலகம் எதுவும் வேண்டாம்!
அன்று இரவு அருகில் இருந்த ஒரு நகரத்துக்கு சென்ற கார்சன். ஒரு விடுதியில் நடந்ததைப் பார்த்தார்.

அங்கே தன்னை கண்மண் தெரியாமல் தாக்கும் வெள்ளையர்களிடம் இருந்து தப்பி, ஒரு செவ்விந்திய வாலிபன் அவரை நோக்கி ஓடி வந்தான்.
அந்த செவ்விந்திய நாயை பிடி!
அது கோகர்த்தும் அவன் கூட்டாளிகளும் அல்லவா?

கோகர்த்தின் ஆள் கயிற்றை வீச–

வகையா மாட்டிக் கொண்டான்!
அந்த திருட்டுப்- -பயலே, தரதரவென்று இழு!
செவ்விந்திய இளைஞனைக் காப்பாற்ற ஒற்றர்படை தலைவர் விரைந்தார்.

என்ன இதெல்லாம்?
இவன் எங்க குதிரையை திருட முயன்றான். எனவே நீங்க தலையிடாதீங்க, கார்சன்!

அந்த செவ்விந்திய வாலிபன் தன் பெயர் ரெட் ஆட்டர் என்றான்.
சார்! நான் குதிரையை திருட வரவில்லை. உரோமம் விற்க வந்தேன்!
உன்னை நம்புகிறேன்!

அதைக் கேட்டு கோகர்த் ஆத்திரம் அடைந்து, கார்சனைத் தாக்கினான்.
கார்சன்! இதில் தலையிட வேண்டாம் என்று சொன்னேன்!

அடுத்த நிமிடம், ஒற்றர் படைத் தலைவரின் இரும்பு போன்ற கரம் திருப்பித் தாக்கியது.

அதை பயன்படுத்திய
ரெட் ஆட்டர்-

ஏய்!
அவனை
விடாதே!
பிடி!

செவ்விந்திய வாலிபனை சுடுவதற்கு கோகர்த்தின் ஆள் துப்பாக்கி-
யை எடுக்கையில், கார்சன் மின்னல் வேகத்தில் சுட்டார்.
ஏய்! ஒற்றர்படை தலைவரிடம் தகராறு வேண்டாம்!

கார்சன்! கெட்டிக்காரத்தனம் என்று நினைப்பா? எங்களுக்கும் காலம் வரும்!


கார்சன் போனதும், அடுத்து என்ன என்று அந்தக் கூட்டம் ஆலோசித்தது.
காலதாமதம் வேண்டாம். நமது திட்டத்தை நிறை வேற்றுவோம்!

அன்று நள்ளிரவு. சுரங்கம் அடித்து கோட்டைக்குள் மர்மகொள்ளையர் நுழைந்தனர். சாமான்கள் கிடங்கில் காவலாளி நின்றபடி தூங்கினான்.

ஒரு கொள்ளையன், காவலாளி தலையில் அடித்து வீழ்த்தினான்.
சத்தம் போடாமல் வேலையை முடியுங்க!
காவலாளியின் கண்ணையும், வாயையும் கட்டினர்.
செவ்விந்தியரின் இந்த கோடாரியை அடையாளமா போடுகிறேன்!
ராணுவ கிட்டங்கி கொள்ளை அடிக்கப்பட்டது பற்றி மறுநாள் நகரில் காட்டுத் தீ போல் செய்தி பரவியது. அது செவ்விந்தி-யர்களின் வேலை என்று கோகர்த் எல்லோரிடமும் சொன்னான்!
செவ்விந்தியர் பயன்படுத்தும் கோடரி கிடந்து இருக்கு. அதனால் கொள்ளை அடித்தது செவ்விந்திய கூட்டம்தான்!

தொள்ளை காரணமாக, இரவு காவலாளி வில்சனை. கர்னல் கிட் கைது செய்தார். டாக்டரின் ஆலோ–சனையும் மீறி அது நடந்தது!
ஏற்கனவே வில்சனுக்கு உடல்நலம் இல்லை. அவனை இரவு காவலுக்கு போட்டதே சரி இல்லை.
தலைவலி, வயிற்று வலி என்று சொல்லி இரவு காவல் வேலையில் இருந்து தப்பிக்க தந்திரம் செய்வார்கள். என்னை ஏமாற்ற முடியாது.

அடுத்த 10–வது நிமிடம் கர்னல், எல்லா வீரர்களையும் அழைத்தார்.
இன்றில் இருந்து, ரெண்டு பேர் சேர்ந்து காவல் செய்யணும். அவர்களுக்கு கவாத்து பயிற்சியில் இருந்து விதிவிலக்கு கிடையாது!

சிப்பாய்கள் இடையே அதிருப்தி வெடிக்க இருப்பதை அறிந்து கார்சன், கர்னலிடம் பேசினார்.
சார்! உங்களது கடுமையான போக்கு காரணமாக, வீரர்கள் கலகம் செய்யும் நிலைக்கு வந்து உள்ளனர்!
கலகமா? அவர்கள் செய்து பார்க்கட்டும் மிஸ்டர் கார்சன்! நீர் ஒரு ஒற்றன்! உம் வேலையை பாரும்!

கோகர்த்தும், அவன் ஆட்களும், ராணுவ கிட்டங்கியில் இருந்து துப்பாக்கி, தோட்டா எதையும் திருடவில்லை. வீரர்களின் சீருடைகளை மட்டும் திருடினர்
அவற்றை ஒரு மறைவிடத்தில் அவர்கள் அணிந்து கொண்டார்கள்.

பிறகு அவர்கள் லாங்லான்சி தலைமையில் இருந்த செவ்விந்-தியர் முகாமுக்கு சென்றார்கள்.
செவ்விந்திய வீரர்கள் வேட்டைக்கு போய் இருக்-கிறார்கள்!
ஆமா! கொள்ளை அடிக்க இதுவே தக்க தருணம்!

அடுத்த வினாடி பயங்கர கொள்ளை தொடங்கியது.

ஒருவன் குதிரைகளை கொள்ளை அடித்தான்.

மற்றவர்கள் கம்பளிகளையும், மற்ற விலை உயர்ந்த பொருட்களை
யும் கொள்ளை அடித்தனர்.

முகாமில் பெண்கள், குழந்தைகள் மட்டும் இருந்ததால் அவர்கள் வேலை எளிதாக முடிந்தது.

கொள்ளைப் பொருட்களை ஒரு மறைவிடத்தில் மறைத்து வைத்தனர்.
கொள்ளை அடித்த குதிரைகளை கழுகு பள்ளத்தாக்கு ஓட்டிச் சென்று அங்கே அருவி கரையில் விட்டுவிடு. சீக்கிரம் விற்று விடலாம்!
சரி, கோகர்த்!

2 நாட்கள் கடந்தன. வேட்டைக்குப் போன செவ்விந்திய தலைவர் லாங்லான்சியும், மற்ற வீரர்களும் திரும்பினர். தங்கள் குடியிருப்பு கொள்ளை அடிக்கப்பட்டு தரை மட்டம் ஆனதைப் பார்த்து பதறினர்.

அதைக் கேட்ட செவ்விந்திய வீரர்கள் கொதித்தனர்.
தலைவரே! பழிக்குப்பழி வாங்கணும்!
இந்த அக்ரமத்தை சகித்துக் கொள்ள நாம் கோழைகளா?
திருடப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு வெள்ளையன் உயிரை எடுக்கணும்.
வீரர்களை அமைதியாக இருக்—
—கும்படி தலைவர் கூறினார்.
வெள்ளை-
-யர்களை பழிக்குப்பழி வாங்குவோம்! கொஞ்சம் பொறுங்க!
ஆனால் இளம் வீரர்கள் அமைதி கொள்ள மறுத்தனர்.
நாம் ஏன் பொறுமை காட்டவேண்டும்? சுடச்சுட முடிப்பதே பழிக்குப்பழி!

தலைவரின் ஆணித்தரமான பேச்சு அனைவரையும் கட்டுப்படுத்தியது!
முட்டாள்களே! வெள்ளைக்கார கொள்ளையர்களிடம் துப்பாக்கி வெடிமருந்து எல்லாம் இருக்கு. நாம் போய் மோதினால் நம்மை முறியடிப்பார்கள். அவர்கள் நம்மைவிட அதிகம் பேர் உள்ளனர். அதனால் பக்கத்து ஊரில் முகாமிட்டு இருக்கும் நமது இனத்தவரையும் நம்முடன் சேர்க்க வேண்டும்!

உடனே பக்கத்து முகாமுக்கு 3 பேர் தூது புறப்பட்டனர்.

சிவப்பு இந்தியர் குடியிருப்பு, கொள்ளை அடிக்கப்பட்டது பற்றி ஒற்றர்படை தலைவர் அறிந்து—
கர்னல்! எதிர் நடவடிக்கையாக செவ்விந்தியர்கள் பக்கத்து ஊர் செவ்விந்தியர்களுடன் சேர்ந்து நம்மை தாக்குவார்கள்.
தாக்கட்டும். அதனால்தான் நான் நம் படை வீரர்களுக்கு கடும் பயிற்சி கொடுத்து எப்போதும் தயார் நிலையில் வைத்து இருக்கேன்!

கார்சன் வெளியே வந்த போது, கிட்டங்கி பொறுப்பாளர் வந்து—
கார்சன்! ராணுவ உடைகளை மட்டும் திருடிச் சென்று உள்ளனர்.
அப்படியா?

உடனே, ஒற்றர் தலைவருக்கு, ரவுடி கோகர்த் நினைவு வந்தது. ராணுவ உடையில் செவ்விந்தியர்களை கோகர்த் கூட்டத்தினர் திருடி இருக்க வேண்டும் என்று அவர் சந்தேகம் கொண்டு, துப்பு துலக்க புறப்பட்டார்!
கோகர்த்தான் கொள்ளை அடித்தது என்று நிரூபித்தால், செவ்விந்திய தலைவர் அமைதி கொள்வார்!
பல நாட்களுக்கு முன்பு, கோகர்த் கூட்டம் போன கால் தடத்தை கஷ்டப்பட்டு கண்டு பிடித்து, கார்சன் பின்தொடர்ந்தார்.

நகரில் இருந்து கார்சன் ஒரு மைல் தூரம் வந்தார். கழுகு பள்ளத்தாக்கு அருகே கால் தடம் நன்றாகத் தெரிந்து.
அதிக கால் தடம் தெரிகிறது. நிறைய குதிரைகள் போய் உள்ளன. அவை செவ்விந்தியர் முகாமில் திருடப்பட்ட குதிரைகளாக இருக்க வேண்டும்!


இதற்கு இடையில் கோட்டையில், திருட்டு நடந்த போது கிட்டங்கியை காவல் காத்த வில்சனுக்கு, கர்னல் கடும் தண்டனை வழங்கினார்!
ஒரு நாளைக்கு 4 மணி நேரம் வீதம் தண்டனை கவாத்து பழகணும். உன்னை ஜெயிலில் அடைக்கவில்லை. அதை நினைத்து சந்தோஷப்படு!

வழக்கமான பணி போக, துப்பாக்கி, "கிட்"பை சகிதம் வில்சன் தண்டனை பயிற்சி பெற்றான்.
அந்த கர்னலை இந்த மாதிரி நடக்க விடணும்! அப்போதுதான் அவருக்கு புத்தி வரும்!

4 மணி நேர தண்டனை பயிற்சி முடியும்
வில்சன் மயங்கி விழ——
இப்படி தண்டனை பெற்றால் செத்துவிடுவான்.
ஏற்கனவே இவனுக்கு சுகம் இல்லை.
வில்சன் மயங்கி விழுந்ததை அறிந்து எல்லா வீரர்களும் குழுமினர். அனைவர் முகத்திலும் கோபம் கொப்பளித்தது.
அந்த கர்னல் இரக்கமே இல்லாத அரக்கன். அவர் நம்மை மிருகங்களைப்போல் நடத்துகிறார்.
நம்மால் என்ன செய்ய முடியும்?

கலகம் செய்வோம். கர்னலையும், மற்ற அதிகாரி களையும் பிடிப்போம். கோட்டையை விட்டு வெளியேறுவோம்!
கலவரம் செய்ததாக நம்மை தூக்கில் போடமாட் -டார்களா?
நம்மை பிடித்தால்தானே. மேற்கு திசையில் தலைமறைவாகி விடுவோம்!
கலகம் செய்ய வேண்டும் என்ற முடிவு எல்லா வீரர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அதை அறிந்த சார்ஜெண்ட் லோமஸ்—
ராணுவ கலகம் வேண்டாம். இதனால் உங்களுக்கு மரண தண்டனைதான் மிஞ்சும்!
சார்ஜெண்ட்! எங்களை தடுக்க வேண்டாம். வீரர்களே! பின் தொடருங்கள். முதலில் கர்னலை பிடிப்போம்! வன்முறையை தவிர்ப்போம்!

வீரர்கள் கர்னல் ஆபீசை நெருங்கினர். சத்தம் கேட்டு கர்னல் கிட் வெளியே வந்தார்.
இப்படி கூட்டமா வருவதற்கு என்ன அர்த்தம்?
மிருகங்களைவிட கேவலமாக நாங்கள் நடத்தப்படுவதை இனியும் சகிக்க முடியாது. நாங்க வெளியே போகிறோம்!
ஏய்! கலககாரா? நீ தூக்கில் தொங்குவாய்!
கர்னல் துப்பாக்கியை எடுக்கப் போனார். அவரை இரண்டு வீரர்கள் பிடித்துக்கொண்டனர்.
உடனே மற்ற வீரர்கள் ஓடிப்போய் மற்ற ராணுவ அதிகாரிகளையும் பிடித்தார்கள்.

அவர்களை ஒரு அறையில் பூட்டி வைத்துவிட்டு கலக சிப்பாய் -கள் புறப்பட்டனர்.
ஏய்! அந்த வில்சன் நம்முடன் வருகிறானா என்று கேட்போம். பாவம் அவன். உடல் நலம் இல்லாமல் இருக்கிறான்.
டான் என்ற சிப்பாய் வில்சன் அறைக்குப் போய், வில்சனுக்கு மயக்கம் தெளிவித்தார். பிறகு—
வில்சன்! எங்களுடன் வருகிறாயா?
என்னால் ஒரு மைல்கூட குதிரையில் வர முடியாது.
சரி ஒரு மணி நேரத்தில் நாங்கள் போய் விடுவோம். பிறகு கர்னலையும், மற்ற அதிகாரிகளையும் அடைத்துவைத்து இருக்கும் கதவுகளை திறந்து விடு!
சரி! டான்! வெற்றி உண்டாகட்டும்!

நகரத்துக்கு சிப்பாய்கள் போனார்கள். ஆனால் என்ன நடக்கிறது என்று நகர மக்களுக்கு தெரியாது!
இந்த மாநில எல்லையை கடக்கும் வரை நாம் சேர்ந்து போவதே பாதுகாப்பு.
ஆமா! அதுதான் சரி. மேற்கு திசையை அடைந்து விட்டால் எந்த பயமும் இல்லை.

2 மணி நேரம் கழித்து, கர்னல் அடைபட்டு கிடந்த கதவை வில்சன் திறந்து விட்டான்.
எங்கே அவர்கள்?
எனக்குத் தெரியாது. உங்களை இங்கே அடைத்து வைத்திருப்பதாக டான் கூறினார். நான் களைப்பு தீர்ந்ததும் மெல்ல வந்து திறந்தேன்.

லெப்டினென்ட் கிரகாம்! நீ பிளிட்சர் கோட்டைக்குப்போய் குதிரைகளையும், ஆயுதங்களையும், வீரர்களையும் கொண்டு வா!
சார் பிளிட்சர் கோட்டைக்கு போக 2 நாட்களாவது ஆகும். அதற்குள் கலக சிப்பாய்கள் நாலா திசையிலும் பறந்து விடுவார்கள்.

என் ஆயுள் முழுவதும் ஆனாலும் சரி. வெளியேறிய சிப்பாய்களை விடமாட்டேன். சா -ஜெண்ட் லோமஸ்! எல்லா சிப்பா -களின் பெயர், வீட்டு விலாசம் உள்பட முழு விவரத்தையும் தயார் செய்து கொடு!
சரிசார்!

இதற்கு இடையில் கொள்ளையர் தலைவன் கோகர்த், குதிரைகளை மறைத்து வைத்து இருக்கும் இடத்தை தேடி ஒற்றர் படைத் தலைவர் கார்சன் கழுகு பள்ளத்தாக்கு போனார். கோகர்த் பிடியில் இருந்து அவர் காப்பாற்றிய செவ்விந்திய இளைஞன் ரெட் ஆட்டர், அவரைப் பின்தொடர்ந்தான்!
கார்சன் இங்கே எங்கே வந்தார்? அவருக்கு என் உதவி தேவைப்படலாம்!

அந்தி மயங்கும் நேரத்தில் கார்சன் மெல்ல கழுகு பள்ளத்தாக்கினுள் ஊடுருவினார்.
ஒருவன் மட்டும் காவல் இருக்கிறான் மற்றவர்கள் வரும்முன் இவனை மடக்கி விட்டால், உண்மையை தெரிந்து கொள்ளலாம்!

காவல் இருந்த கொள்ளையன் பின்னால் கார்சன் போய்—
ஏய்! சத்தம் போடாமல் கையை மேலே தூக்கு! இல்லே சுடு—வேன்!
அவனை கட்டிப் போட்டார். அதன்பின் அந்த இடத்தை சோதனை போட்டார்.
இங்கே ஆள் நடமாடிய அடையாளம் தெரியுது. இந்த பாறைக்கு பின்புறம் துப்பு கிடைக்கலாம்! போய் பார்க்கிறேன்!
கடைசியில், கார்சன் எதிர்நோக்கிய துப்பு கிடைத்தது!
நான் என்ன அனுமானித்து இருந்தேனோ, அது சரிதான் என்பதை இந்த ராணுவ சீருடை நிரூபிக்கிறது!

ஒற்றர் படைத் தலைவர் கார்சன் மேலும் பல சீருடைகளைக் கண்டு பிடித்தார். அப்படி இருக்கையில் திடீர் என்று கோகர்த் கொள்ளைக் கூட்டத்தினர் அங்கே வர—
எல்லோரும் கையை மேலே தூக்குங்க! என்னைத் தாக்க எதாவது செய்தால் சுட்டுக் கொல்வேன்!

அப்போது ஒருவன் மெள்ள தன்துப்பாக்கியை எடுத்து கார்சனை சுட முனைய—


மின்னல் வேகத்தில் அவனைக் கார்சன் சுட, அவன் கையில் குண்டு தைத்தது.

அந்த சமயத்தை பயன்படுத்தி, கோகர்த்தும், மற்ற கொள்ளை-யரும் பாய்ந்தனர். துப்பாக்கியில் குண்டு தீர்ந்ததும், கார்சன் கைகளால் சண்டை போட்டார்.

குண்டுக் காயம்பட்ட கொள்ளையன் கோபத்தில் ஒரு பாறாங்கல்லை தூக்கி கார்சன் மீது வீசினான்.
பிறகு அவன் கார்சனை சுட்டு வீழ்த்த எத்தனிக்கையில்—
ஏய் நில்!
பாஸ்! அவனை விடக்கூடாது!
பாஸ்! தடுக்க வேண்--டாம்!
கார்சன், பிரசித்தி பெற்ற ஒற்றர். அவரைக் கொன்றால், நம்மை அரசாங்க படைகள் வேட்டையாடும். இப்போது நம் மீது யாரும் சந்தேகப்--படவில்லை. எனவே கார்சனை விபத்தில் சாக அடிப்போம்.

மயங்கி கிடந்த கார்சனை, அவர் குதிரையில் தூக்கி போட்டுக்-கொண்டு கொள்ளை கூட்டம் புறப்பட்டது.
யாராவது இந்தப் பக்கம் தென்படுகிறார்களா என்று பார்த்தபடி வேகமா போங்க!

கார்சன் மயங்கி கிடப்பதையும், அவரை குதிரையில் கோகர்த் கூட்டத்தினர் கொண்டு போவதையும் ரெட் ஆட்டர் பார்த்தான்.
என்னை தாக்கிய கொடியவர்கள், கார்சனை பிடித்து இருக்கிறார்கள்.

உடனே, ரெட் ஆட்டர் குதிரையில் பறந்தான்.
என் உயிரைக் காத்த, கார்சனை நான் காப்பாற்ற வேண்டும்!
நதிக்கரை வந்ததும், கார்சனை குதிரையில் இருந்து இறக்கினர்.
கார்சன் துப்பாக்கியை உறையில் வைத்து விடு. சந்தேகமே வராது!
பிறகு கார்சன் ஆற்றில் வீசப்பட்டார்.
அஃ! அஃ! இனி கார்சன் பற்றிய பிரச்சினையே இல்லை!

கார்சன் உடல் பல மைல் தூரம் போய் கரையில் ஒதுங்கும். நம் மீது சந்தேகம் வராது!


தனது மாஸ்டர் தண்ணீரில் அடித்துச் செல்லப்படுவதை அறிந்து, கார்சனின் குதிரை, பாறைகள் நிறைந்த கரை வழியாக ஓடியது. அவரை காப்பாற்ற அது முனைந்தது.

இதற்கு இடையில், கொள்ளையர் கண்ணில் இருந்து தப்ப, வேறு பாதையில் போன ரெட்ஆட்டர், ஆற்றில் கார்சன் மிதந்து போகும் இடத்தை அடைந்தான்.
உடனடியா கார்சனை காப்பாற்ற வேண்டும்!
ரெட் ஆட்டர் குதித்தான்!
நீச்சல் பழக்கம் கொண்ட ரெட் ஆட்டர் கார்சனை பிடித்து இழுத்து கரைக்கு கொண்டு சென்றான்.


கார்சனை கரையில் தூக்கிப் போட்டு, அவருக்கு செயற்கை சுவாச பயிற்சி செய்தான். அப்போது கார்சனின் குதிரை அங்கே வந்து சேர்ந்து கொண்டது!

நல்ல உடல் ஆரோக்கியம் கொண்ட கார்சனுக்கு சீக்கிரம் நினைவு திரும்பியது. பிறகு அவர், கோகர்த் கூட்டத்தினரே ராணுவ சிருடையை திருடியதை ரெட் ஆட்டரிடம் கூறினார்.
எனவே, உங்க குடிஇருப்பைக்-கொள்ளை அடித்தது, கோகர்த் கூட்டத்தினர்-தான். எங்க ராணுவ வீரர்கள் இல்லை!
இருக்கலாம். என்றாலும், எங்கள் உரிமைகளைப்-பறிக்கும் வெள்ளை வீரர்களை பழி வாங்கவே எங்கள் இன மக்கள் துடிக்கிறார்கள்.


பிறகு ரெட் ஆட்டரிடம் விடை பெற்றுக் கொண்டு, கார்சன் புறப்பட்டார்.
கார்சன்! நடக்க இருக்கும் சண்டையில் நான், உங்களுக்கு எதிராக போர் புரிய வேண்டி உள்ளது வேறு வழி இல்லை!
நான் அதை புரிந்து கொள்கிறேன். எது எப்படி இருந்தாலும் நீயும் நானும் என்றும் சகோதரர்கள்!

இரவு நெருங்கியது. பிளினி கோட்டைக்குப் போய்க் கொண்டு இருந்த கார்சன், வழியில் செவ்விந்திய வீரர்கள் அணிவகுத்துச்- செல்வதை பார்த்தார்.
இந்த செவ்விந்தியர்கள் லாங்லான்சியின் குடிஇருப்புக்கு போகிறார்கள். இவர்களை கொஞ்சம் தாமதப்-படுத்தினால் தான், நாம் தயார் ஆக முடியும்!

செந்விந்தியர் கண்ணில் படாமல் கார்சன், பிளினி கோட்டைக்கு விரைந்தார்.
இனியாவது, கர்னல் கிட், என் யோசனையை கேட்பாரா? அல்லது..
இரவு முழுவதும் பயணம் செய்து கார்சன் கோட்டையை அடைந்து கர்னலை சந்தித்தார்.
நாம் சண்டை போடலாம். ஆனால் எல்லா சிப்பாய்களும் ஓடி விட்டார்களே!
செய்வது அறியாது விழித்த கர்னலிடம் கார்சன்-
நகரத்தில் இருந்து ஆட்களை கொண்டு வந்து படை அமைக்கலாம், அவர்கள் பெரும்--பாலும் வேட்டைக்காரர்கள், சுடத்-தெரிந்தவர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தை காப்பாற்ற சண்டை போடு--வார்கள்.
நகர ஆட்கள் சண்டைக்கு லாயக்கு இல்லை.

உடனடியாக நகரவாசிகளை கார்சன் கோட்டைக்குள் அழைத்து வந்தார்.
பிறகு, அவர். நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்த வில்சனிடம் வந்தார்.
வில்சன்! நமது வீரர்கள் எங்கே போனார்கள் தெரியுமா?
அவர்கள் மேற்கு திசையில் போவதா பேசிக் கொண்டனர்.
உடனடியா நான் அவர்கள் சிதறி போவதை தடுத்து, இங்கே கொண்டு வரலாம்! அதை எப்படி செய்வது..?

ஒற்றர் படை தலைவர் கார்சன் சாப்பிட்டு, ஓய்வு எடுத்த பின், கோட்டையின் மீது உள்ள கண்காணிப்பு நிலையத்துக்கு சென்றார். அங்கே சார்ஜெண்ட் லோமஸ் காவல் இருந்தார். கார்சன் சுற்றுமுற்றும் பார்த்தார்.
கார்சன்! அங்கே என்ன நடக்குது?
செவ்விந்தியர்கள் நம்மை சூழ்ந்து உள்ளனர். உயரமான இடங்களில் கண்காணிப்பு மேடைகளை அமைக்கிறார்கள். அவர்கள் போர் தொடுக்க சில நாட்கள் ஆகும்!

கொஞ்ச நேரத்தில் கார்சன், கோட்டையை விட்டு புறப்பட்டார்.
கார்சன்! இரவில் போனால் ஆபத்து இராது!
தாமதிக்க நேரமில்லை. எப்படியாவது செவ்விந்தியர் கண்ணில் படாமல் போக வேண்டும்!

அருகில் இருந்த பள்ளத்தாக்கு வழியாக கார்சன் பயணப்--பட்டார்.
இந்த ஆற்றை கடக்க வேண்டும்!

ஆற்றில் வெள்ளம் வேகமாகச் சென்றது. சீக்கிரமாக போவதற்கும், செவ்விந்தியர் கண்களில் இருந்து தப்புவதற்கும் ஒரே வழி, ஆற்றை கடப்பதுதான் என கார்சன் முடிவு செய்தார்.
நான் வெற்றி பெற ஆபத்துகளை சமாளித்தே ஆக வேண்டும்!


குதிரையை பிடித்துக் கொண்டு, அதன் பலத்தில் நீந்தினார்.
வெள்ள வேகம் அதிகமா இருக்கு. என்றாலும் கரை ஏறி விடலாம்!

பகலெல்லாம் கார்சன் பயணப்பட்டார் திடீர் என்று ஒரு கணவாய் இடைப்பட்டது.
இந்த கிடுகிடு பள்ளத்தாக்கை கடப்பது எப்படி?

குதிரையை பின்னுக்கு கொண்டு போய் பாய்ந்து வந்தார்!

பெர்கித் கணவாய் பகுதியை கார்சன் அடைந்தபோது, நேரம் விடிந்தது. பிறகு பல குதிரைகளின் கால் தடங்கள் தெரிந்தன.
இந்த வழியாகவே போய் உள்ளனர். விரைந்து போனால் பார்க்கலாம்!

இதற்கிடையில் மாநில எல்லையைக் கடந்த படை வீரர்கள், அங்கு இருந்து இருவர் மூவராய் பிரிந்து செல்கிற நேரம் வந்தது.



படை வீரர்களுக்கு தலைமை தாங்கிய மலோனிடம் கார்சன்-
சரியான நேரத்தில் உங்களை சந்தித்து விட்டேன்!
சரியான நேரமா? எங்களை உம்மால் தடுக்க முடி--யாது!
மலோன்! நான் சொல்வதை பொறுமையா கேள்!
பிளினி கோட்டையை, செவ்விந்தியர் தாக்க இருப்பதை கார்சன் விவரித்தார்.
ஆனால் மலோன் அசைந்து கொடுக்கவில்லை. கோட்டைக்கு திரும்ப அவர் விரும்பவில்லை.
நாங்க கோட்டைக்கு திரும்பினா அந்த கர்னல், ராணுவ கோர்ட் விசாரணை வைப்பார்.

அதைக்கேட்டு கார்சன் அதிர்ச்சி அடைந்தார். பிளினி கோட்டையை காப்பாற்ற அவர் எடுத்த முயற்சி, ஒரே வினாடியில் பிசுபிசுத்து போனதை அறிந்து அதிர்ந்த அவர், கோபம் கொண்டு மலோனை தாக்கினார்.
நேரம் தெரிந்து நட!
கீழே விழுந்த மலோன் முன் கார்சன் குதித்து நின்றார்.
நீங்க எல்லோரும் திரும்பாவிட்டால், பெண்கள், குழந்தைகளின் அவலக்குரல் உங்களை காலம் முழுவதும் துரத்தும்!
பெண்கள், குழந்தைகளின் அவலக்குரலா?
ஆமா! நகர மக்கள் இப்போது கோட்டைக்குள்இருக்கிறார்கள். பக்கத்து குடியிருப்பு செவ்விந்தியர்களும் சேர்ந்து தாக்க வருவதால் கடைசியில் மிஞ்சப் போவது அவர்-களின் அவலக்-குரல்-தானே!
மலோன் கொஞ்சம் யோசித்தான்.

பிறகு மலோன் குதிரையில் ஏறி அமர்ந்தான்.
தோழர்களே! கார்சன் சொல்வது சரிதான்! நாம் பெண்களையும், குழந்தைகளையும் காக்க போர் புரிவோம்!

அடுத்த விநாடி ஒற்றர் படைத் தலைவர் கார்சன் வீரர்களுடன் பிளினி கோட்டை நோக்கி புறப்பட்டார்.
வேகமாக வாங்க! ஒரு நிமிடம்கூட தாமதிக்க முடியாது!
அவரை மலோனும் மற்ற வீரர்களும் பின்தொடர்ந்தனர்.

பிளினி கோட்டையை அடுத்து உள்ள இரண்டு குடி இருப்புகளைச் சேர்ந்த செவ்விந்தியர்கள் ஒன்று சேர்ந்து கோட்டை மீது படை எடுத்தனர்.
வெள்ளையர்களை கொல்!
பழிக்குப் பழி!

செவ்விந்தியர்களை எதிர்த்து, நகரத்து ஆண்களுடன் அமைக்கப் பட்ட சிறு படையுடன் கர்னல் கிட் மோதினார்.

செவ்விந்தியர் தாக்குதல் பலமாக இருந்தது. ஒரு செவ்விந்திய இளைஞன் கர்னலைக் குத்தப்-போனான். அதை சிப்பாய் வில்சன் தடுத்து இராவிட்டால், கர்னல் களப்பலி ஆகி இருப்பார்.
வில்சன்! என்னை காப்பாற்றினாய். உன்னை மறக்க மாட்டேன்!
செவ்விந்தியர்கள் நாலாபுறமும் தாக்கினர். கோட்டை விழும் நிலை வந்தது.
சார்! ரொம்ப நேரம் தாக்குப்-பிடிக்க முடியாது!
கடைசி வரை போராட வேண்டும், கேப்டன்!

செவ்விந்திய வீரர்கள் கோட்டைக்குள் நுழையும் தருவாயில், ஒற்றர் படை தலைவரும், கோட்டையில் இருந்து போன சிப்பாய்களும் அங்கே வந்து தாக்கினர்.
உம்... சுடுங்க!

இரண்டு பக்க தாக்குதலை செவ்விந்தியர்களால் தாங்க முடியவில்லை. உம்! நேருக்கு நேர் மோத குழல் ஊது!

அதைப் பார்த்து கோட்டையில் இருந்தவர்கள் குதூகலம் அடைந்தனர்.
சார்! அது கார்சன்! நம் சிப்பாய்களுடன் வந்து இருக்கார்!
ஆண்டவன் நம்மை காப்பாற்-றினர்.

கார்சனும், மற்ற வீரர்களும் செவ்விந்திய வீரர்களுடன் கடுமையாக மோதினர்கள்.
களையும்,
யும் நன்ருக
வர்கள் நீங்கள்.
ஆரம்பத்தில்
ங்கள் பேச்சை கே
இருக்க

எதிர்பாராத அந்த தாக்குதலால் செவ்விந்தியர் நிலை குலைந்து, பின் வாங்கினர்.

போரில் ஏற்பட்ட தோல்வி செவ்விந்திய தலைவர் லாங்-லான்சியை வாட்டம் அடையச்-செய்தது.
வெள்ளை நாய்கள்நம்மை வென்று விட்டனர்.
நமது பக்கத்து குடியிருப்பு வீரர்கள்தான் முதலில் பின்வாங்-கினர்.

கோட்டைக்குள் கார்சனும், மற்றவர்களும் நுழைந்தபோது உற்சாக வரவேற்பு கிடைத்தது.
கார்சன்! நீங்க தக்க நேரத்தில் உதவினீர்கள்! நன்றி
செவ்விந்தியர்களை விரட்டிச் சென்று தாக்க வேண்டும், என்றார் கர்னல். அதை கார்சன் எதிர்த்தார்.
கோகர்த் கூட்டத்தை முதலில் பிடிக்க வேண்டும். செவ்விந்திய தலைவர் முன் நிறுத்தி உண்மையை விளக்க வேண்டும். நிரந்தர அமைதி ஏற்பட அதுவே வழி!
செவ்விந்தியர்களையும், நம் வீரர்களையும் நன்றாக அறிந்தவர்கள் நீங்கள், நான் ஆரம்பத்தில் உங்கள் பேச்சை இருக்க

2 நாட்கள் கடந்தன. கோகர்த் கொள்ளைக் கூட்டத்தை, கார்சன் வீரர்களுடன் சூழ்ந்தார்.
கோகர்த்! அசையாமல் இரு. இல்லை சந்து சந்தாக பிய்த்து விடுவோம்!
கார்சனா! நீர் சாக வில்லையா?

மறுநாள். சமாதான கொடியை பிடித்துக் கொண்டு, கோகர்த் கூட்டத்துடன் செவ்விந்தியர் குடிஇருப்புக்கு கார்சன் வர—
வருவது ஒற்றர் தலைவர் கார்சன்!
அவருடன் வரும் கைதிகள் யார்? எதாவது சதியா?
இருக்காது அவர் வரட்டும்!

செவ்விந்திய வீரன் ரெட் ஆட்டர் உதவியுடன், கோகர்த் கூட்டம் நடத்திய கொள்ளை பற்றி கார்சன் விவரித்-தார்.
தலைவர் அவர்களே! சிப்பாய்கள் உடையில் இந்த கொள்ளை—-காரர்கள் தான் கொள்ளை அடித்து உள்ளனர்.
இவர்களை எங்களிடம் ஒப்படையுங்க. நாங்க தண்டிக்க வேண்டும்!
மிஸ்டர் லாங் லான்சி! அவர்கள் முதலில் எங்கள் கோட்டையில் திருடி உள்ளனர். அதனால் நாங்க தண்டிக்கிறோம்.
அதன் பேரில் கொள்ளைக் கூட்டத்தை கார்சன் கொண்டு சென்றார்.
இனி நமக்கும் வெள்ளை-யருக்கும் மோதல் இராது. நிரந்தர அமைதிக்கு கார்சன் ஏற்பாடு செய்வார்.
சரி!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: எஸ். ராமஜெயம் பி. ஏ., 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

'சூப்பர் ஹீரோ' டைகர் தூள் பறத்தும், பாம்புவனக் கோட்டை!

பயங்கரவாதிகளின்முக்கிய தலைவர்களில் ஒருவனான கார்ல் என்பவனை, சர்வதேச பயங்கரவாதிகள் ஒழிப்பு நிறுவன ரகசிய ஏஜெண்டுகளான டைகரும், ஹென்றியும் தீர்த்துக் கட்டினார்கள்.

டைகர், ஹென்றி இருவரும் லண்டன் திரும்பியதும், அடுத்த வேலை தயாராக இருந்தது.
டைகர்! நம்ம ஏஜெண்ட் ராபர்ட்டை பயங்கரவாதிகள் பிடித்துவிட்டனர். அவனை, பாம்பு வனத்தில் உள்ள கோட்டையில் அடைத்து வைத்து உள்ளனர். ராபர்ட்டிடம் முக்கிய தகவல்கள் உள்ளன. இருவரும் அங்கே போய் அவனை மீட்டு வாருங்க!
அந்த கோட்டையை நெருங்க முடியாதபடி அமைத்து உள்ளனரே!
கோட்டைக்குள் புக முடியாதபடி மின் அதிர்வு மண்டலம் அமைக்கப்-பட்டு இருக்கு. அதை நமது நிபுணர்கள் 20 நிமிடம் கட்டுப்படுத்துவார்கள். அதற்குள் நீங்கள் உள்ளே போய் வரணும்.
மின் அதிர்வு மண்டலத்தில் இருந்து 7 மைல் உள்ளே போனால்தான் கோட்டையை அடைய முடியும்!
மறுநாள். பாம்பு வன கோட்டையை நோக்கி டைகரும் ஹென்றியும் விசேட மோட்டார் சைக்கிளில் புறப்பட்டனர்.
ஹெலிகாப்டரில் வந்தால் கண்டுபிடித்து விடுவார்கள்.
கார் போகும் பாதையை அடைத்து விட்டனர். மோட்டார் சைக்கிளில் போவதுதான் ஒரே வழி!

கோட்டையைச் சுற்றி பாதுகாப்பாக இருந்த மின் அலை அதிர்வு மண்டலம் கொஞ்ச நேரம், செயல் இழக்கச் செய்யப்பட்டது.
இதுதான் நேரம்! உள்ளே பாய்ந்து போ!
கரடுமுரடான பாதையில் 1 மைல் தூரம் போனதும்—
டைகர்! ஒரு செடி என் மோட்டார் சைக்கிளில் சிக்கிக்-கொண்டது!
டைகர்! பெட்ரோல் குழாய் சேதம் அடைந்து விட்டது. சரியாக்க நேரமாகும். எனவே நீ மட்டும் உள்ளே போ!
சரி! ஹென்றி!

உள்ளே மேலும் சில மைல் போனபோது, ரோடுகளில் தடை வைக்கப்பட்டு இருப்பதை டைகர் பார்த்தார்.
பயங்கர வாதிகள்!
“பைக்” சத்தம் கேட்டு அவர்கள் சுடலாம்! மின்னல் வேகத்தில் பாய்கிறேன்!
கடைசியில் பாம்பு வனக்கோட்டையை டைகர் அடைந்தார். ஒரு சுவிட்சை அழுத்தியதும் “ஹெட் லைட்” பாய்ந்தது!
இதுதான் எதிருண்டு!

அடுத்த கணம் கோட்டைக்-
கதவு தவிடு பொடியாகியது.
டைகர் உள்ளே நுழைந்தார். இன்னொரு பொத்தானை
அழுத்தியதும் ஆளை மறைக்கும் அளவு கரும்புகை
கிளம்பியது
அவனை
நிறுத்து!
ஏஜெண்ட் ராபர்ட் இருந்த அறை
ஜன்னலை டைகர் அனுமானித்தார்.
பிறகு பெட்ரோல்
"டேங்"கில் இருந்த
பொத்தானை அழுத்த,
ஒரு ஏணி மேலே
நீண்டது.


ஏணியின் முனை ஜன்னலைத் தொட்டதும் ஒரு குண்டு வெடித்து, ஜன்னல் சிதறியது.
கைதியை காப்பாற்ற வந்து இருக்கான். விடாதே!
இப்போ ஹென்றியும் இருந்தால், சண்டை போட உதவியா இருக்கும்!


கரும் புகை மண்டல பாதுகாப்பில் டைகர் எதிரிகளைச் சுட்டார்.
ஹென்றி நல்ல நேரத்தில் காலை வாரி விட்டுவிடுவான்!

ராபர்ட்! ஓடி வா! "பைக்"கில் ஏறு! குயிக்!
ஆ! ஐயோ! பயங்கர "பைக்" அது!
போகிற நேரத்தில் சில குண்டுகளைச்— —சுடுகிறேன்!
ராபர்ட்டுடன் டைகர் தப்பி ஓடியபோது—
போக பெட்ரோல் இல்லையா?
பெட்ரோல் டாங்கியில் குண்டு பாய்ந்துவிட்டது.

டைகரும், ராபர்ட்டும் ஓடினார்கள். பின்னால் பயங்கரவாதிகள்!
வேகமா ஓடு!
முட்டாள்களே! சீக்கிரம் வாங்க! எவ்வளவு நேரம் காத்து இருப்பது?
ஹென்றி!
மின் அதிர்வு மண்டலம் மீண்டும் ஏற்படும் முன் வேகமாக தப்பினர்.
ஒரு முக்கிய வேலை முடிந்தது. எல்லோருக்கும் கிருஸ்துமஸ் வாழ்த்து கூறி, சந்தோஷமா கொண்டாடலாம்.
நான் இங்கே இருந்தது எவ்வளவு நல்லதா போய் விட்டது!
முற்றும்

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!

குங்-பு மன்னன்
ப்ரூஸ்-லீ
தோன்றும்

திசைமாறியகப்பல்!

முழு நீள சித்திரக் கதை

சித்ராமணாளன் எழுதும்

தொடர் கொலை!

மர்மத் தொடர் கதை

ரூ.௫௦ பரிசு: வாசகர் போட்டி

விலை-ரூ-1-50

படிக்கத் தவறாதீர்கள்

ராணி காமிக்ஸ்

1-1-87-ல் வெளி வருகிறது!

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7